1981 ஆகஸ்ட் 31]

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தேர்வு ஒத்தி வைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். பழனி வேல், கே. ஆர். சுந்தரம், திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொர்ணம் ஆகியோர் ''சென்னை சட்டக் கல்லூரி மாணவர் களின் தேர்வுகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் அந்த மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து திரு. சொரணம் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை சட்டக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அவர்களை கூப்பிட்டுப் பேசி தீர்வு காண்பதற்குப் பதில் சட்டக் கல்லூரித் தேர்வைத் தள்ளிவைத்து மூடு விழா நடத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு மூடு விழா நடத்தியிருக்கிறார்கள். சட்டக் கல்லூரி மாணவர்கள் என்பவர்கள் ஒரு பட்டப் படிப்பை முடித்து பட்டதாரியாக ஆகி அடுத்த பட்டம் பெற வருபவர்கள். ஆகவே, அவர் களுடைய குறைகளைப்பற்றிப் பேச அவர்களைக் கூப்பிட்டுப் பேசி தீர்வு காணும் முறையிலே அரசாங்கம் நட வடிக்கை எடுக்க முன் வர வேண்டுமென்று விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவ ரவர்களே, சட்டக் கல்லூரி பகுதித் தேர்வுகளில் முதல் கட்டத் தேர்வுகள் 22–6–81 அன்று ஆரம்பித்தது. சென்னை சட்டக் கல்லூரியில் தேர்வுகள் அமைதியாக நடைபெற வேண்டுமென் பதற்காகப் போலீசார் காவல் இருந்தனர். போலீசாரை வெளி யேற்றிய பின்னரே தேர்வுகள் எழுதுவோம் என மாணவர்கள் நிர்ப்பந்தித்ததால் போலீசார் வெளியேற்றப்பட்டனர். தேர்வு கள் எழுதிய மாணவர்கள் புத்தகங்களைப் பார்த்து (மாஸ் காப்பீயிங்) எழுதுவதைத் தடுத்ததால் மாணவர்கள் சட்டக் கல்லூரியில் இருந்த சுமார் 42,000 ரூபாய் மதிப்புள்ள அரசுக்குச் சொந்தமான பொருள்களைச் சேதப்படுத்தினர். முதல் கட்டத் தேர்வில் மாணவர்கள் புத்தகங்களைப் பார்த்து எழுதியதாகக் குற்றச்சாட்டுக்கள் வந்ததால் சென்னை சட்டக் கல்லூரியில் தேர்வுகளை வைக்காமல் இரண்டாம் கட்டத் தேர்வுகளைச் சென்னை மாநிலக் கல்லூரி, நந்தனம் கலைக் கல்லூரி மற்றும்

காயிதே மில்லத் கலைக் கல்லூரிகளில் நடத்தலாம் எனப் பல்கலைக் கழகம் அரசின் அனுமதி பெற்று அறிவித்தது. இந்தத் தேர்வு மையங்களை மாற்றியதை எதிர்த்து மாணவர்கள் கலகம் செய்ததால் பல்கலைக் கழகம் பகுதி நேர இரண்டாம் கட்டத் தேர்வில் தொடங்கி அனைத்துச் சட்டக் கல்வித் தேர்வுகளையும் நிறுத்தி வைத்து விட்டது. மேற்கொண்டு தேர்வுகளை எப்பொழுது ஆரம்பிப்பது என்பது பற்றியும், தேர்வு மையங்களைத் தீர்மானிப்பது குறித்தும் பல்கலைக் கழகம் தேவையான கருத்துரைகளை அனுப்பிய பின் முடிவெடுக்கப்படும்.

மாணவர்களிடையே அடிக்கடி ஏற்படும் அமைதியின்மையைத் தடுப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கல்வியமைச்சரவர்கள் மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்தக் கூட்டங்களில் மாணவர்கள் புத்தகங்களைப் பார்த்து எழுதுவதைத் தடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. தேர்வுகளைத் தள்ளி வைத்திருப்பதால் மாணவர்களிடையே பதட்ட நிலை இருப்பதாக அரசுக்குத் தகவல் எதுவும் வரவில்லை. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறுத்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

(அ). மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம்திருத்த) சட்ட (முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 54/1981.)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS